## மொழிபெயர்ப்பு

இல. 22/99 பொ.நி சுற்றறிக்கையின் கீழான அனுமதிப்பத்திர பெறுநர்கள்,
இல. 01/2018 வி.மு.கொ சுற்றறிக்கை மற்றும் அதற்குப்பிந்திய திருத்தங்களின் கீழான அனுமதிப்பத்திர பெறுநர்கள்,
இல. 210 வெ.வி சுற்றறிக்கையின் கீழான அனுமதிப்பத்திர பெறுநர்கள்

**சலுகை அடிப்படையிலான அனுமதிப்பத்திரங்களின் கீழ் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான கடன் கடிதங்களை திறப்பதற்காக வசதியளித்தல்**

பொது நிர்வாக சுற்றறிக்கை இல.22/99, வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல.01/2018 (திருத்தப்பட்டவாறு), மற்றும் வெளி விவகார அமைச்சின் சுற்றறிக்கை இல.210 ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன இறக்குமதிக்காக கடன் கடிதங்களைத் திறப்பதற்காக மீண்டும் வசதியளிக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியால் 2019 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க 2019.04.18 ஆந் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

2. குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், இதுவரை வழங்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ள அனுமதிப் பத்திரங்களுக்காக அனுமதிப்பத்திர பெறுநர்கள், கீழே குறிப்பிட்டுள்ளவாறு கடன் கடிதங்களைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**2.1 இல.22/99 பொ.நி சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள்**

அ. 2018.12.31 திகதி அல்லது அதற்கு முன்னர் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்காக - 2019.05.01 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர்.
ஆ. 2018.12.31 திகதிக்குப் பின்னர் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்காக - 2019.06.01 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர்

**2.2 இல.01/2018 வி.மு.கொ சுற்றறிக்கை (திருத்தப்பட்டவாறு) மற்றும் இல.210 வெ.வி அமைச்சின் சுற்றறிக்கை ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள்**

அ. 2018.09.30 திகதி அல்லது அதற்கு முன்னர் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்காக – 2019.06.01 திகதி அல்லது அதற்குப் பின்னர்

ஆ. 2018.11.30 திகதி அல்லது அதற்கு முன்னர் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்காக – 2019.07.01 திகதி அல்லது அதற்குப் பின்னர்

இ. 2019.02.28 திகதி அல்லது அதற்கு முன்னர் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்காக – 2019.08.01 திகதி அல்லது அதற்குப் பின்னர்

ஈ. 2019.06.30 திகதி அல்லது அதற்கு முன்னர் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்காக – 2019.09.01 திகதி அல்லது அதற்குப் பின்னர்

உ. 2019.10.01 திகதி அல்லது அதற்குப் பின்னர் - எந்தவொரு திகதியிலும் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்திற்காக கடன் கடிதங்களைத் திறக்க முடியும்.

3. உள் நாட்டில் தயாரிக்கப்படும் வாகனங்களைக் கொள்வனவு செய்ய உத்தேசிக்கும் அனுமதிப்பத்திர பெறுநர்களும் தங்கள் அனுமதிப்பத்திரத்தின் பேரில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் போது முதலாவது கட்டணத்தை செலுத்த வேண்டியது மேலே குறிப்பிட்ட காலப்பகுதிகளின் பிரகாரம் ஆகும்.

4. மேலே குறிப்பிட்ட காலப்பகுதிகள் தொடர்பாக சுங்கப் பணிப்பாளர் அதிபதி மிக அவதானத்துடன் செயற்படுவதால் மேற்படி விதிமுறைகளுக்கு அப்பால் கடன் கடிதங்களைத் திறந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் / முதலாவது கட்டணத்தைச் செலுத்தி கொள்வனவு செய்யப்படும் உள்நாட்டில் தயாரிக்கப்படும் வாகனங்கள், இறக்குமதியாக/ உள்நாட்டு தயாரிப்பாகக் கருதப்பட்டு முழுத் தீர்வைத் தொகையும் அறவிடப்படவோ அத்தகைய அனுமதிப்பத்திர உரிமையாளர்களின் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படவோ முடியும்.

5. மேலும் மேற்படி நியமங்களின் பிரகாரம் குறித்த காலத்தில் மாத்திரம் தமது அனுமதிப்பத்திரத்திற்காக கடன் கடிதங்களைத் திறப்பதற்கு/உள்நாட்டில்கொள்வனவு செய்வதற்காக முதலாவது கட்டணத்தைச் செலுத்துவதற்கு அனைத்து அனுமதிப்பத்திர உரிமையாளர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் குறித்த நியமங்களின் பிரகாரம் செயற்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் ஏனைய நிருவாக ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்: **சீ. ஜயசூரிய**
பணிப்பாளர் நாயகம்
வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்